
# நற்றமிழ்க்குடில்

தமிழால் தழைக்கும் உலகு

மாணவ இலக்கிய இதழ்

குடில் : 2 ஜனவரி 2020 விருந்து : 5



சோகா தமிழ்ப்பேரவை வெளியீடு

- தனிச்சுற்று -

# நற்றமிழ்க்குடில்


ஆசிரியர் குழு : மு. சத்யா
முதுகலைத் தமிழ், இரண்டாமாண்டு.

அ. ஸ்டெல்லா மேரி
அ. பர்ஸானா
ஆ. வள்ளி
இளங்கலைத் தமிழ், மூன்றாமாண்டு.

அ. உமா மகேஸ்வரி
சா. யோகேஸ்வரி
இளங்கலைத் தமிழ், இரண்டாமாண்டு.

ஆலோசனைக் குழு : டாக்டர் சேது குமணன்
கல்லூரித் தலைவர்

முனைவர் ம.சம்ஷாத்
கல்லூரி முதல்வர்

பேராசிரியர் சே.கண்மணி
தமிழ்த்துறைத் தலைவர்

தமிழ்த்துறைப் பேராசிரியர்கள்

வெளியீடு : சோகா தமிழ்ப்பேரவை
சோகா இகெதா கலை மற்றும் அறிவியல்
மகளிர் கல்லூரி, சென்னை - 600 099.

விலை : ரூ.15/-

அச்சு : "ஸ்பெஷல் எபெக்ட்ஸ்"
மறுதோன்றி அச்சகம், அம்பத்தூர்
பேசி : 9282142789

# நற்றமிழ்க்குடில்

மாணவ இலக்கிய இதழ்


குடில் : 2 விருந்து : 5

சோகா தமிழ்ப்பேரவை வெளியீடு

ஜனவரி 2020


## உள்ளே........


தலையங்கம்

தம்பிக்குக் கடிதம்

அறிவோம் அறிஞரை

நூல் அறிவோம்

விடுகதைகள்

கவிதை

கட்டுரை

தூரிகைத் தூரல்கள்

# தமிழர் திருநாளாம் பொங்கல் பெருநாளாம்



## தைப்பொங்கல் :


பொங்கல் "தை" ஒன்று, தமிழர்களால் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வரும் ஒரு தனிப்பெரும் விழா. இவ்விழா தமிழர் திருநாளாகத் தமிழ்நாடு, இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், மொரிசியஸ், ஐரோப்பிய நாடுகள், வட அமெரிக்கா, தென் ஆப்பிரிக்கா எனத் தமிழர் வாழும் அனைத்து நாடுகளிலும் கொண்டாடப்படும் விழா. சங்க காலத்திலிருந்தே பொங்கல் பண்டிகை கொண்டாடப்பட்டு வருகிறது. அறுவடை காலத்தில் நல்ல மழை பொழியவும், நாடு செழிக்கவும், பெண்கள் நோன்பினை முடிப்பார்கள். விளைச்சலுக்கு உதவிய பூமி, சூரியன், கால்நடை போன்றவற்றிற்கு நன்றியினையும், மகிழ்ச்சியையும் தெரிவிக்கும் வகையில் ஆடி மாதம் முதல், உழைத்துச் சேமித்த நெல்லை, மார்கழியில் வீட்டிற்குக் கொண்டு வந்து தமது உழைப்பின் பயனை நுகரத் தொடங்கும் நாளே "தைப்பொங்கல்" எனப்படுகிறது.

## போகி :

பொங்கல் பண்டிகை நான்கு நாட்கள் கொண்டாடப்படும் பண்டிகை ஆகும். மார்கழி கடைசி நாளன்று "போகி" கொண்டாடப்படுகிறது. அந்நாளில் "பழையன கழிந்து புதியனப் புகுதல்" வழக்கம். அக்காலத்தில் போகி அன்று சில கிராமங்களில் ஒப்பாரி வைக்கும் பழக்கம் இருந்தது. போகி அன்று சிறுவர்கள் மேளம் அடித்துத் தெருக்களில் சுற்றி மகிழ்வார்கள்.


## மாட்டுப் பொங்கல் :

உழவுத் தொழிலுக்கு உறுதுணையாக விளங்கும் ஆவணி தினத்தன்று ஆவினத்திற்கு நன்றி தெரிவிக்கும் நாளே இந்நாள்



ஆகும். பொங்கலிட்ட பிறகு "பொங்கலோ பொங்கல், மாட்டுப் பொங்கல் வட்டிப் பெருக, பால்பானை பொங்க நோவும் பிணியும் தெருவோடு போக" என்று கூறி மாடு எச்சில் உண்ட பொங்கலை எச்சில் தண்ணீரைத் தொழுவத்தில் தெளிப்பார்கள். மாட்டினை நீராட்டி மஞ்சள் குங்குமம் இட்டு கொம்புகளுக்கு வண்ணம் பூசி வழிபடுவதே "மாட்டுப் பொங்கல்" ஆகும்.

## மஞ்சு விரட்டு :



தமிழர்களின் மரபுவழி விளையாட்டு பொங்கல் விழாவினை முன்னிட்டு வட தமிழகத்தில் பல இடங்களில் "மஞ்சு விரட்டு" நடத்தப்படுகிறது. மஞ்சு விரட்டு என்பது ஒரு திடலில் காளைகள் அவிழ்த்து விடப்படும். கட்டுப்பாடற்று ஓடும் காளைகளை இளைஞர்கள் விரட்டுவதேயாகும்.

## காணும் பொங்கல் :



இன்றைய நிலையில் உறவினர்கள், நண்பர்களுடன் இணைந்து செல்லும் பழக்கம் குறைந்து வருகிறது. "காணும் பொங்கல்" அன்று உறவினர்களுடன் கூடி கோவில்கள், கடற்கரைகளுக்குச் சென்று சுற்றிப் பார்த்து மகிழ்வார்கள்.

## இன்றைய சமூகச் சூழலில் பொங்கல் :

முன்பெல்லாம் பொங்கல் அன்று அனைத்து வகைக் காய்கறிகளைப் போட்டு குழம்பு வைப்பார்கள். இன்று அந்நிலை குறைந்தும் உள்ளது. பள்ளி, கல்லூரிகளில் "சமத்துவப் பொங்கல்" என்றும் கொண்டாடப்படுகிறது. கலை நிகழ்ச்சிகள்,

உரியடி போன்ற விளையாட்டுகளும் நடைபெறுகின்றன.

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்" (குறள் : 1033)

என்று வள்ளுவர் போற்றும் உழவர் திருநாள். இந்நாளை அனைவரும் மகிழ்வுடன் கொண்டாடுவோம்.

மு.சத்யா

முதுகலைத்தமிழ், இரண்டாமாண்டு.

## உனக்கானப் பயணம்



வாழ்க்கை என்பது
நிறைவைத் தேடும் பயணம்
உனக்கானப் பயணத்தை
உடனே தொடங்கிடு!
வெற்றியும் இல்லை, தோல்வியும் இல்லை
அது வெறும் மனநிலை மட்டுமே
உலகம் உன்னைச் சுற்றி வரும்



தன்னம்பிக்கையை
நெஞ்சில் குடியேற்று
உனது எடை
பூமியின் எடையை விட
அதிகம்
என்பது புரியும்!
பாதை வேறு! பயணம் வேறு!
விளைவுகள் வேறு! விளைச்சலும் வேறு!
உரிய வேகம் உயரிய விவேகம்
உனது சிறகுகளாகட்டும்!

**ஜெ.நிஷாந்தி**
இளங்கலைத்தமிழ், இரண்டாமாண்டு.

# தம்பிக்குக் கடிதம்



அன்புள்ள தம்பி நிலவனுக்கு,

உன் உடன்பிறவாச் சகோதரி மு.சித்ரா கமலி எழுதுவது. இங்கு நானும் என் குடும்பத்தினர்களும் நலம். நீயும் உன் குடும்பத்தினர்களும் நலமா? நிலவன் நாம் இருவரும் சென்ற தீபாவளியில் சந்தித்தோம். அன்று எப்படிச் சென்றது என்றே தெரியவில்லை. இனிமையாக நிறைவடைந்தது அந்நாள். நிலவன் 11.09.2019 அன்று பாரதியின் நினைவு நாள் அல்லவா. அன்று நான் என் கல்லூரியில் முதன் முறையாக பட்டிமண்டபப் பேச்சாளராக வாதம் செய்யக் கிடைத்த ஒரு மேடை. பாரதியின் நினைவு நாளுக்காக வருடம் ஒரு முறை நடத்தப்படும் பட்டிமண்டபம். தலைப்பு என்ன என்றால் பாரதியார் கவிதைகளில் விஞ்சி நிற்பது இயற்கையா? மொழியா? என்பதே. எனது அணியில் மூன்று நபர்கள். என்னைச் சேர்த்து எனது எதிர் அணியில் மூன்று நபர்கள். என் எதிர் அணியில் என் வகுப்புத் தோழி.

பட்டிமண்டபத்தின் நடுவர் அவர்கள் எங்கள் துறையின் தமிழ்ப் பேராசிரியர் அரு.அபிராமி அம்மா அவர்கள். நான் தான் முதலில் பட்டிமண்டபத்தில் பேசினேன். நான் "பாரதியார் கவிதைகளில் விஞ்சி நிற்பது இயற்கையே" என்று வலியுறுத்திப் பேசினேன். பட்டிமண்டபத்தில் அனைவரும் சிறப்பாக வாதம் செய்தோம். நிறைவாக நடுவர் அம்மா அவர்கள் நல்ல தீர்ப்பினைக் கூறினார். நிகழ்வின் நிறைவாக என்னுடைய துறைத் தலைவர் அம்மா அவர்கள் என்னைப் பாராட்டிப் பேசினார். அச்சமயத்தில் என் கண்களே கலங்கியது, மெய் சிலிர்த்தது. மறக்க முடியாத நாள் அன்று. பாரதியார் எப்படி எல்லாம் இயற்கையை அழகாக வருணனை செய்துள்ளார்

"காக்கைக் குருவி எங்கள் சாதி
நீள் கடலும் வானும் எங்கள் கூட்டம்"


என்று எப்படி எல்லாம் இயற்கையைக் காதலித்தார் பாரதி. அவை எல்லாம் இப்பொழுது நானும் இயற்கையைக் காதல் செய்கின்றேன். நிலவன் கண்டிப்பாக ஒருநாள் நான் பேசும் என்னுடைய பேச்சினை நம் குடும்பத்தினர்கள் கேட்க வேண்டும் என்கின்ற மிகப்பெரிய அவா உள்ளது. சரி நிலவன் நீயும் உன் குடும்பத்தினரும் வருகின்ற விடுமுறைக்கு நம் வீட்டிற்கு வாருங்கள். நான் உன்னுடைய வருகையினை எதிர்பார்த்துக் கொண்டு இருப்பேன் நிலவன்.

இப்படிக்கு

உன் அன்பு சகோதரி

**மு.சித்ரா கமல்**

# இன்சுலின்




- இன்சுலின் முதன்முதலில் மருத்துவத்தில் சனவரி 11, 1922ல் சர்க்கரை நோய்க்காகப் பயன்படுத்தப்பட்டது.

- இன்சுலின் சர்ஃடர்ரிக் ஜி பாண்டிங், சார்லஸ் எச் பெஸ்ட் மற்றும் ஜே.ஜே.ஆர். மக்லியோட் ஆகியோர்களால் டொரான்டோ பல்கலைக்கழகத்தில் 1922 அன்று கண்டுபிடிக்கப்பட்டது.

- பின்னர் ஜெம்ஸ் பி.காலிப் அவர்களால் சுத்திகரிக்கப்பட்டது. உலக அளவில் சர்க்கரை நோய்க்குப் பயன்படுத்தப்படும் ஒரே மருந்து இன்சுலின் ஆகும்.

**ஹ.யமுனா**

இளமறிவியல் முதலாம் ஆண்டு

# சுவாமி விவேகானந்தர்



உன் நிலை எப்படிப்பட்டதாக இருந்தாலும், அதைக் குறித்து நீ கவலைப்பட வேண்டாம். இலட்சியத்தைப் பற்றிக் கொண்டு முன்னேறியபடி இரு. இப்படித் தன் போதனைகளால் இளைஞர்களுக்கு ஊக்கம் கொடுத்தவர் சுவாமி விவேகானந்தர். இந்தியாவின் பெருமைகளை உலகறியச் செய்த விவேகானந்தரின் பிறப்பும் வளர்ப்பும் பற்றித் தெரிந்து கொள்வோமே. கொல்கத்தாவில் சனவரி 12, 1863ல் பிறந்தார். விவேகானந்தர் விசுவநாத தத்தர்–புவனேசுவரி பெற்றோருக்கு மகனாகப் பிறந்தார். விவேகானந்தரின் இயற்பெயர் நரேந்திரநாத். எல்லோரும் நரேன் என்று அழைப்பர்.

ஆன்மீகத்திலே முடிசூடா மன்னராக, விவேகானந்தர் ஒளி வீசினார். சிகாகோ நகரில் நடந்த சர்வமத மாநாட்டில் சுவாமி விவேகானந்தர் ஆற்றியச் சொற்பொழிவு இந்திய நாட்டின் பெருமையை உலகுக்கு உணர்த்தியது.

இளமைப் பருவம் முதலே விவேகானந்தர் துணிவும், மனித நேயமும், பக்தியும் கூர்ந்த மதியும் பெற்று இருந்தார். எங்கே மதம் வாணிபமாகி, வாணிப முறையில் நடைபெறுகிறதோ, அங்கே ஆன்மீகம் அழிந்து போகிறது.

சுவாமி விவேகானந்தரையும் பாரதியையும் நம் இளையச் சமுதாயம் பின்பற்றுமானால் நம் சமுதாயத்தின் வளர்ச்சியையும், வாழ்வையும் தடுத்து நிறுத்த எந்த ஆற்றலாலும் முடியாது. விவேகானந்தரை மிகச் சுருக்கமாக அறிய வேண்டுமென்றால் பாரதியின்,

“கடமை யாவன தன்னைக் கட்டுதல்
பிறர் துயர் தீர்த்தல், பிறர்நலம் வேண்டுதல்”

எனும் பாடலை நினைவில் கொள்ளுதல் வேண்டும்,.

**விவேகானந்தரின் பொன் மொழிகள்:-**

⇨ உங்களை நீங்களே நம்புங்கள்!


⇨ விடா முயற்சியே வெற்றி தரும்!

⇨ உண்மைக்காக எதையும் துறக்கலாம். ஆனால் எதற்காகவும் உண்மையைத் துறக்கக் கூடாது!

**ஜெ.நிஷாந்தி**

இளங்கலைத் தமிழ், இரண்டாமாண்டு.

# தூரிகைத் தூரல்கள்



**மு.சரஸ்வதி**

உயிர் வேதியியல், முதலாமாண்டு.

நூலின் பெயர்: **ஒன்றில் மூன்று - குறட்பா விளக்கம்**

நூலாசிரியர் : கவிஞர் செம்பை சேவியர்

வெளியீடு : 2017 மார்ச்சு

கவிஞர் செம்பை சேவியர் இயற்றிய "**ஒன்றில் மூன்று - குறட்பா விளக்கம்**" என்ற நூல் திருவள்ளுவரின் திருக்குறளை அடிப்படையாக வைத்து எழுதப்பட்ட நூலாகும். திருக்குறளில் இடம் பெற்றுள்ள அதிகாரங்களை அடியொற்றி இவர் எழுதியிருக்கின்றார். ஒரு அதிகாரத்தில் இடம்பெறும் மூன்று குறள்களை எடுத்துக்கொண்டு அதற்கு உரையெழுதியிருக்கின்றார். எனவே தான் தன்னுடைய நூலின் தலைப்பிற்கு "ஒன்றில் மூன்று குறட்பா விளக்கம்" எனப் பெயரிட்டுயிருக்கின்றார்.

இந்நூல் நூலாக்கம் பெறுவதற்கு முன் காஞ்சி மாவட்டத்தில் வெளிவரும் "மலையருள்" என்ற திங்கள் இதழில் தொடர்ச்சியாக வெளிவந்தது. "தாய் மொழியாம் தமிழையும், திருக்குறளையும்," சிறியோரும், பெரியோரும் மறந்த இக்காலத்தில் திருக்குறளைப் பயிலத் தூண்டும் வகையில் இவர் படைப்பு அமைந்திருப்பதாக பாராட்டியுள்ளனர்.

இவரின் "தாத்தாவும் பேரனும்" என்ற உரையாடலில் சிறுவனும், திருவள்ளுவரும் சந்தித்து உரையாடியது போல் உரையாடி திருவள்ளுவர், வள்ளுவர் கோட்டம், தொல்காப்பியம், திருக்குறள், தமிழையும் பற்றி அறிமுகம் படுத்தும் பகுதி நகைச்சுவையாய் அமைந்துள்ளது.

திருக்குறளில் உள்ள மொத்த அதிகாரங்களையும் தன் நூலில் சுட்டிக் காட்டவில்லை. 47 அதிகாரங்களை மட்டும் எடுத்துக் கொண்டுள்ளார். ஒட்டு மொத்தத்தில் திருக்குறளின் சாரத்தைச் சுருக்கமாகவும், எளிமையாகவும் இவர் படைத்துத் தந்திருக்கின்ற "ஒன்றில் மூன்று" இந்த நூல் அனைவரும் படிக்க வேண்டிய ஒன்றாகும்.

**ர.சங்கீதா**

இளங்கலைத்தமிழ், மூன்றாமாண்டு.

# விடுகதைகள்



ரா.ரம்யா
வணிகவியல் முதலாமாண்டு 'ஆ' பிரிவு

1. கண்டு பூ பூக்கும், காணாமல் காய் காய்க்கும். அது என்ன?
2. கழுத்து உண்டு, தலையில்லை; உடல் உண்டு, உயிர் இல்லை; கையுண்டு, விரல் இல்லை. அது என்ன ?
3. ஆயிரம் பேர் வந்து சென்றாலும், அங்கே சுவடு இல்லை. அவர்கள் யார்?
4. பச்சை பச்சை டாக்டர், பால் போல் டாக்டர், குண்டு குண்டு டாக்டர், குதிரைவால் டாக்டர். இவர்கள் யார்?
5. கிளை உண்டு, இலை இல்லை. அது என்ன?
6. தலையை வெட்ட வெட்ட, கறுப்பு நாக்கை நீட்டும். அது என்ன?
7. மூன்று பெண்களுக்கும் ஒரே முகம். மூத்தப் பெண் ஆற்றிலே. நடுப்பெண் காட்டிலே. கடைசிப் பெண் வீட்டிலே. அது என்ன?
8. ஆலமரம் தூங்க, அவனியெல்லாம் தூங்க, சீரங்கம் தூங்க, திருப்பாற்கடல் தூங்க, ஒருவன் மட்டும் தூங்கவில்லை. அவன் யார்?
9. ஒரே நேரத்தில் மூடித் திறக்கும் கதவுகள், ஓராயிரம் முறை இயங்கினாலும் ஓசை வராதக் கதவுகள். அது என்ன?
10. கறுப்புக் காகம் ஓடிப் போச்சு. வெள்ளைக் காகம் நிற்குது. அது என்ன?

11. பளபளவென்று பட்டுடுத்திப் பதினாயிரம் குஞ்சலம் தொங்கவிட்டுத் தெருவைச் சுற்றி வருகிற பெண் திரும்பிப் பார்க்க மாட்டாளாம். அது என்ன?

12. கழற்றிய சட்டையை மறுபடியும் போட மாட்டான். அவன் யார்?

13. வாயில்லை, புத்திமதிகள் சொல்வான், காலில்லை, கடந்தும் செல்வான். கையில்லை, உளங்காட்டிக் கொள்வான். உயிரில்லை ஒருநாளும் சாக மாட்டான். அது என்ன?

14. "உடல் சிவப்பு, வாய் அகலம், உணவு காகிதம்." அது என்ன?

15. விரிந்த வயல்வெளியில் விதைத்த நெல்மணிகள். அது என்ன?

16. பந்திக்கு வரும் முந்தி, வெளியே வரும் பிந்தி. அது என்ன?

**விடை :**

1. வேர்க்கடலை
2. சட்டை
3. எறும்புகள்
4. வெற்றிலை, சுண்ணாம்பு பாக்கு, புகையிலை
5. மான் கொம்பு
6. பென்சில்
7. ஆற்றில் முதலை, காட்டில் உடும்பு, வீட்டில் பல்லி.
8. மூச்சு
9. இமை
10. உளுந்து
11. தேர்
12. பாம்பு
13. புத்தகம்
14. அஞ்சல் பெட்டி
15. நட்சத்திரம்
16. இலை




# பொங்கல் வாழ்த்து



தமிழர் திருநாள் இது! - தமிழர்களின்
வாழ்வை வளமாக்கும் திருநாள்!
உழைக்கும் உழவர்களின்,
களைப்பைப் போக்கி,
களிப்பில் உற்சாகப்படுத்தும் திருநாள்!
உறங்கும் பெண்களை
அதிகாலையிலே எழுந்து
கோலம் போடவைக்கும்
கோலாகலமானத் திருநாள்
மிரட்டி வரும் காளைகளை
விரட்டி அடக்கும் வீரத் திருநாள்
பழைய எண்ணங்களை அவிழ்த்து,
புதிய சிந்தனைகளைப் புகுத்தும்
புதுமையானத் திருநாள்
புத்தரிசிப் புதுப்பானை பொங்கலுடன்
கதிரவனை வணங்கி,
கொண்டாடுவோம் பொங்கலை!
பழையன கழிதலும், புதியன புகுதலும்
இயற்கையை மீறாமல் இருக்கும்படி
கொண்டாடுவோம் இந்த ஆண்டின் பொங்கலை!
உடலில் ஆரோக்கியம் பொங்க
முகத்தில் சிரிப்பு பொங்க
வாழ்வில் மகிழ்ச்சி பொங்க
பொங்கட்டும் இந்த - புத்தாண்டு
தை பொங்கல்!
“பொங்கலோ பொங்கல்”
என் உடன்பிறவா தமிழ்மக்கள்
அனைவருக்கும் இனிய பொங்கல் நல்வாழ்த்துக்கள்!

**இ.யோகேஸ்வரி,**
மூன்றாமாண்டு, உயிர் வேதியியல்.

# பொது அறிவு



1. இந்தியாவில் வெளிவந்த முதல் சிறுவர் பத்திரிக்கை எது?
**பால தீபிகை**

2. இந்தியா தயாரித்த முதல் ஏவுகணை என்ன? **ஆகாஷ்**

3. நோபல் பரிசு பெற்ற இந்திய நூல் எது? **கீதாஞ்சலி**

4. இந்தியாவின் முதல் அணு ஆய்வு மையத்தின் பெயர் என்ன?
**அப்சரா**

5. பாரத ரத்னா விருது பெற்ற முதல் பெண்மணி யார்?
**இந்திரா காந்தி**

6. இந்தியாவின் முதல் செய்தித்தாள் எது?
**பெங்கால் கெஸ்ட், ஜனவரி 27, 1780**

7. இந்தியாவின் முதல் பால் பண்ணை எது?
**மாதவரம்**

8. இந்தியாவில் வைரச் சுரங்கம் எங்கே உள்ளது?
**பன்னா, மத்தியப் பிரதேசம்**

9. இந்தியாவில் முதல் அணுமின் நிலையம் எங்கு அமைக்கப்பட்டது?
**தாராப்பூர்**

10. சென்னையிலுள்ள உழைப்பாளர் சிலையை வடிவமைத்தவர் யார்?
**பேபி பிரசாத் ராய் சாவித்திரி**

— வே.மீனா

வணிகவியல், முதலாம் ஆண்டு "ஆ" பிரிவு.



# முண்டாசு கவி


போர்க்களத்தில் நின்று
எதிரிகளைக் கொன்று
படைகளை வென்று
பெருமையோடு வருவது மட்டுமா வீரம்?
"பார்" எங்கிலும் தம் கவிவாளால்
சமத்துவம் பரவிடச்செய்து "அதி"சயம் புரிந்த
இவர் "யார்" என அனைவரையும்
வியக்கச் செய்தவர் "பாரதியார்"

தலைமுடியைத் தலைப்பாகைக்குள் மறைத்து
முறுக்கு மீசைக்குச் சாணம் தீட்டி
எழுத்தாணிக்குத் தம் கவியால் எழுச்சியூட்டி
சவுக்கடிப் பேச்சால்
சமூகத்திற்கே அதிர்ச்சியூட்டியவன்!
சாதிமத வேற்றுமைக்குச் சாவுமணி அடித்தவன்!
தமிழனென்றால் இவனே என்று
தரணி போற்ற நின்றவன்!

ஏழுவயதில் எழுதுகோலைப் பிடித்த இந்த
எட்டயபுரத்துக் கவி எஜமானுக்கு
மூளைக்கு எட்டியதெல்லாம் கவியாச்சு!
பாரதியே உன்னைக் கவியாக்கவா?
துருத்துரு வசனங்களைத் தூவிவிட்டு
குற்றம் குறைகளைச் சுட்டெரிக்கும் நெருப்பாய்ச்
சுடர்விட்டத் தமிழ்க் கவியே
உன்னைக் கவியாக்கவா?

**அ.உமா மகேஸ்வரி**
இளங்கலைத்தமிழ், இரண்டாமாண்டு.

# தன்னம்பிக்கை



உன்னையே நீ முதலில்
தட்டிப்பார் உனக்கென்று
தனி தடயம் இருக்கிறதா என்று....

எரிந்து விடு உன் மனதில்
மறைந்து இருக்கும்
கோழை எண்ணத்தை இன்று.....

தாயின் கருவறையிலிருந்து
யாரையும் எதிர்பாராமல்
எழுந்து வந்தாயே அன்று.....

எதிரினில் வரும் தடுமாற்றத்தையும்
(ஏமாற்றத்தையும்)
நீ கடந்து சென்று.....
எள்ளி நகையாடும் எதிரியின்
கூட்டத்தை நீ வென்று.....

எழுந்து வா தமிழா உன்
"தன்னம்பிக்கை" என்னும்
கருவியைக் கொண்டு......
அதுதான் உன் வாழ்வுக்கு
என்றும் நன்று......

**ஜே.சோனா**
முதுகலைத்தமிழ்
முதலாமாண்டு.

# இயற்கை வழிபாடு



இயற்கை வழிபாடு என்பது உலகில் உள்ள பல பகுதிகளில் வாழும் மக்களிடையே தொன்றுதொட்டு வருகின்ற ஒரு பழக்கமாகும்.

முதலில் மனிதன் இயற்கையைத் தெய்வமாக வணங்கினான்.

மனிதன் இயற்கையில் கிடைக்கும் வளங்களைப் பயன்படுத்திக் கொண்டான். ஆனால் இயற்கையின் சீற்றங்களையும், அவற்றின் அழிவையும் கண்டு பிரமித்தான், அஞ்சினான். அச்சம் தருபவற்றை வணங்கினான். அவைத் தன்னைத் துன்புறுத்தாது என்று நம்பினான். எனவே மனிதன் இயற்கையை வழிபடத் தொடங்கினான்.

இந்த உலகத்தில் எல்லா உயிர்களும் இயற்கையைச் சார்ந்தே வாழ்கின்றன. இயற்கையானது நிலம், நீர், காற்று, ஆகாயம், தீ என்ற ஐம்பூதங்களைக் கொண்டே உள்ளது. ஐம்பூதங்களையும் தெய்வமாக மனிதர்கள் வணங்கி வந்தனர்.

வேளாண்மைத் தொழிலுக்கு உதவும் சூரியனுக்கும், காளை மாடுகளுக்கும் நன்றி செலுத்தும் நாளாக "பொங்கல் பண்டிகை" கொண்டாடப்படுகிறது.

சங்க காலத்தில் "தை நீராடல், பாவை நோன்பு, இந்திர விழா" என அனைத்தும் பொங்கல் பண்டிகையைத் தான் குறிப்பிடுகின்றது. "இந்திர விழா" என்பது காவிரிபூம் பட்டினத்தில் தை மாதத்தில் 28 நாட்கள் கொண்டாடப்பட்டது. அவையே இன்றைய நாளில் 4 நாட்கள் திருவிழாவாய் சுருங்கி விட்டது.

பொங்கல் திருநாள் தமிழர் திருநாள், அறுவடைத் திருநாள், உழவர் திருநாள் எனப் பல சிறப்பு கொண்ட பெயரால் அழைக்கப்படுகின்றது.

பொங்கல் விழா அன்று விவசாயத்திற்கு உதவிய உழவுக் கருவிகளையும், நிலத்தை உழுத காளை மாடுகளையும், வீட்டில் வளர்க்கும் பசு மாடுகளையும், அறுவடை செய்யப்பட்ட நெற்கதிர்கள், கரும்பு, வாழை, மஞ்சள், இஞ்சி, வள்ளிக்கிழங்கு, பணங்கிழங்கு, சேனைக்கிழங்கு, பூசணி, மொச்சை, சுரைக்காய் போன்றவைகளையும் வைத்து வணங்கப்படுகிறது. இவ்வாறு பொங்கலுக்குத் தேவையான பொருட்களை சூரிய பகவான் ஒளிபடும் வெட்டவெளியில் வைத்து வணங்கப்படுகிறது.

ஆதி மனிதன் முதல் இன்று வரைத் தமிழரின் இயற்கை வழிபாட்டின் தொடர்ச்சியே பொங்கல் திருவிழா.

*பெ.சாந்தி*

இளங்கலைத்தமிழ் மூன்றாமாண்டு.

## பன்னாட்டு புதிர்கள் தினம்

❁ சனவரி 29, பன்னாட்டு புதிர்கள் தினமாக கொண்டாடப்பட்டு வருகிறது.

❁ பலவகையான புதிர்கள் உள்ளன. அவை குறுக்கெழுத்துப் புதிர்கள், திகைப்பளி புதிர்கள், சுடோகு புதிர்கள் எனப் பலவகையில் நமது மூளைக்கு பயிற்சி தருகிறது.

❁ அறிவியல் விஞ்ஞானிகள் ஒன்றைக் கண்டுபிடித்துள்ளனர். அது என்னவென்றால் திகைப்பளி என்னும் புதிர்களை விளையாடும் போது, நமது மூளையின் இருபக்கமும் செயல்படுகிறது என்பதனை உணரலாம். ஞாபகத் திறமையும் அதிகரிக்குமாம்.

❁ இவ்வாறு மூளைக்குச் சுறுசுறுப்பைத் தரும் விளையாட்டுகளை விளையாடுவதால், நமது வாழ்க்கையில் வரும் பிரச்சினைகளையோ அல்லது கணிதத்தில் வரும் பிரச்சினைகளையோ எளிதில் தீர்த்து விடலாம்.

*ஹ.யமுனா*

கணிதவியல், முதலாம் ஆண்டு.



## ஜல்லிக்கட்டு

ஏறுதழுவுதல் பல நூற்றாண்டுகளைத் தாண்டி நிற்கும் தமிழ் இனத்தின் அடையாளம் ஆகும். இது ஏறு தழுவுதல், ஏறு கோடல், மாடு பிடித்தல், சல்லிக்கட்டு, மஞ்சுவிரட்டு, கொல்லெருது பிடித்தல் என்று பல பெயர்களில் வழங்கப்படுகின்றது. தமிழர்களின் வீர விளையாட்டுகளில் ஒன்றாக கருதப்படும் இவ்விளையாட்டு மதுரை மாவட்டம், புதுக்கோட்டை மாவட்டம், திருவண்ணாமலை மாவட்டம், தேனி மாவட்டம் அலங்காநல்லூர் மற்றும் பாலமேடு போன்ற ஊர்களில் ஆண்டுதோறும் தை மாதத்தில் பொங்கல் திருநாளையொட்டி நடத்தப் பெறுகின்றது.

சல்லி என்பது விழாவின் போது மாட்டின் கழுத்தில் கட்டப்படுகிற வளையத்தினைக் குறிக்கும். புளியங்கம்பினால் வளையம் செய்து காளையின் கழுத்தில் அணியும் வழக்கம் உள்ளது. அதோடு 50 ஆண்டுகளுக்கு முன்பு புழக்கத்தில் இருந்த “சல்லிக் காசு” என்னும் இந்திய நாணயங்களைத் துணியில் வைத்து மாட்டுக் கொம்புகளில் கட்டிவிடுவர். மாட்டை அடக்கும் வீரருக்கு அந்த பணமுடிப்பு சொந்தம் ஆகும். இந்த வழக்கம் பிற்காலத்தில் “சல்லிக்கட்டு” என்று மாறியது. பேச்சு வழக்கில் திரிந்து எல்லோராலும் ஜல்லிக்கட்டு என்று அழைக்கப்படுகின்றது. மேலும் தமிழரின் திருநாளாம் பொங்கல் திருநாள். அப்பொங்கல் திருநாளில் தை முதல் நாளன்று சூரியனை வணங்கிப் பொங்கல் வைத்து மக்கள் கொண்டாடுவார்கள். தை இரண்டாம் நாள் மாட்டுப் பொங்கல். அந்நாளன்று விவசாயத்திற்குப் பயன்படும் காளைகளைச் சிறப்பித்து வணங்கி பொங்கல் வைத்துக் கொண்டாடுவார்கள். அந்நாளன்று சல்லிக்கட்டு நடத்தப்படும்.

ஆயர்களின் வீரத்தையும், அஞ்சாமையையும் ஏறுதழுவுதல் வழக்கத்தையும் கலித்தொகை எடுத்துக்

காட்டுகிறது. ஆயர் குல மக்களின் வேலை ஆநிரைகளை மேய்த்தல் ஆகும். அக்குலத்தில் பெண் பிள்ளைகள் பிறந்த உடன் வீட்டிற்கு ஒரு சிறிய ஆண் கன்றை வாங்கி வளர்ப்பர். அக்குழந்தையோடு சேர்ந்து அக்கன்றும் வளரும். அப்பெண் பிள்ளை வளர்ந்த உடன் வீட்டில் வளர்க்கப்பட்ட காளையை அடக்கும் வீரனுக்கே அப்பெண் பிள்ளையைத் திருமணம் முடித்துக் கொடுப்பர்.

ஆனால், அந்நிலை மாறி தற்போது காளைகளை அடக்கும் வீரனுக்குப் பொன், பொருள்கள், பரிசுகள் ஆகியவற்றைக் கொடையாக வழங்குகின்றனர். முல்லைக்கலியில் ஏறுதழுவலுக்கு அனுப்பப்படும் காளைகள் பற்றி பின்வரும் பாடல் மூலம் அறியலாம்.

"தாவுஇல் உள்ளமொடு துவன்றி, ஆய்வு உடன்
வள்உருள் நேமியான் வாய்வைத்த வாலைபோலத்
தெள்ளிதின் விளங்கும் கரிநெற்றிக் கரியும்."

வலிமை படைத்த உருண்ட சக்கரப்படையான் வாய் வைத்து ஊதிய சங்கு போல காட்சியளிக்கும் வெள்ளை சுட்டி உடைய கரிய எருது, செங்கான், கொம்பேரி மூக்கன் என்று பல காளைகளின் வகைகளை முல்லைக்கலி கூறுகிறது.

சல்லிக்கட்டினை ஆதரிப்போர் தமிழர்களே. இவை தமிழர்களின் பண்பாடு. இவை அழிந்து விடக் கூடாது. உழவுக்குப் பயன்படும் காளைகளை வைத்து சல்லிக்கட்டு நடத்துவது இல்லை. கன்றில் இருந்தே சிறப்பாக வளர்க்கப்பட்டு, கோவில் மாடாக வழிபட்டு பின் அவற்றைச் சல்லிக்கட்டிற்கு மட்டும் பயன்படுத்தப்படுகின்றது எனப் பலர் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு பழந்தமிழ் இலக்கியங்களிலும் சிந்துசமவெளி நாகரிகத்திலும் ஏறுதழுவல் நிகழ்ந்ததற்கானச் சான்றுகள் பல உள்ளன. "பொங்கல் விழா என்றாலே ஜல்லிக்கட்டு" என்ற விளையாட்டு தான் தமிழர்களின் நெஞ்சில் பதிந்துள்ளது.

காளைகளைத் தெய்வத்திற்கு இணையாக வணங்கி வழிபடுபவர்கள் தமிழர்கள். தமிழர்களின் குல விளையாட்டான ஏறுதழுவல் காலம் கடந்து என்றும் நீங்கா நிலை பெற்று இருக்க வேண்டும் என்பது தமிழனின் பேராசை ஆகும்.

"வாழ்க தமிழர் இனம் ; வளர்க அதன் மரபு"



வீ.காவேரி
இளங்கலைத் தமிழ்
மூன்றாமாண்டு.

# சொல் விளையாட்டு

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| வி | வி | வ | வி | மா | பொ | பு |
| ல் | ழி | வே | ழி | ன | ன் | து |
| அ | வே | சு | யு | த் | ன | மை |
| ழி | ன் | கா | மா | தே | க | பி |
| கி | ளி | இர | அ | தி | ர | த் |
| ரி | க | ரா | கி | ன | ம் | த |
| சா | ல் | ஜா | ல | ம | மா | ன் |
| மி | கி | ஜி | ன் | த | ணி | க |
| யா | மை | ரா | இ | எஸ் | பி | ல் |

**வினா :**

1) கு.ப.ராஜகோபாலன் எழுதிய சிறுகதை எது?
2) காஞ்சனை என்னும் சிறுகதையின் ஆசிரியர் யார்?
3) மணிக்கொடி இதழின் ஆசிரியர் யார்?
4) அன்பளிப்பு என்னும் சிறுகதையின் ஆசிரியர் யார்?
5) பொன்னியின் செல்வன் கதையை எழுதியவர் யார்?
6) புதுமைப்பித்தன் எழுதிய சிறுகதை எது?

க.மகாலட்சுமி
இளங்கலைத் தமிழ், முதலாமாண்டு.



# லாலா லஜபதி ராய்

ஆங்கிலேயர்களுக்கு எதிராகப் போராடி உயிரைத் தியாகம் செய்தவர் "பஞ்சாப் சிங்கம்" லாலா லஜபதி ராய் ஆவார். சமூக சீர்திருத்தத்திற்கும், தேசிய விடுதலைக்கும் தம்மை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டார்.

லாலா லஜபதி ராய் அவர்கள் 1865ஆம் ஆண்டு சனவரி 28ஆம் நாள் பஞ்சாபில் உள்ள மோகாவில் துதிகே என்னும் ஊரில் முன்சி ராதா கிசான் ஆசாத் மற்றும் குலாப் தேவி தம்பதியினருக்கு மகனாகப் பிறந்தார்.

இளமையில் இருந்தே பிறந்த நாட்டிற்குச் சேவை செய்ய வேண்டும் என்ற எண்ணம் லாலா லஜபதி ராய்க்கு இருந்தது. 1914-ல் சுதந்திரப் போராட்டத்தில் தன்னை முழுவதும் அர்ப்பணித்துக் கொண்டார். " சுதேசி இயக்கத்தில்" பங்கு பெற்று தீவிரமாகப் போராடினார்.

*இன்று என் மேல் விழும்
ஒவ்வொரு அடியும்
ஆங்கிலேய அரசின்
சவப்பெட்டிக்கு
அடிக்கப்படும் ஆணிகள்*

என முழங்கினார்.

லாலா லஜபதி ராய், காந்தியுடன் சேர்ந்து ஒத்துழையாமை இயக்கத்தை வெற்றிகரமாக நடத்தினார்.

லாலா லஜபதி ராய் அவர்கள் சாதி வேறுபாடு, தீண்டாமைக் கொடுமைகளைச் சாடினார். குழந்தை திருமணத்தைக் கண்டித்தார். விதவை மறுமணத்தை ஆதரித்தார். இவர் ஆர்ய சமாஜ் யங் இந்தியா, அன்ஹேப்பி இந்தியா போன்ற நூல்களை இயற்றினார். அவரது இறந்த தாயின் நினைவாக பெண்களுக்கான காசநோய் மருத்துவமனை ஒன்றை 1937-ல் தொடங்கினார்.

இவரது தியாகத்தைப் போற்றும் வகையில் 1959-ஆம் ஆண்டு லாலா லஜபதி ராய் அறக்கட்டளை தொடங்கப்பட்டது. மீரட்டில் உள்ள மருத்துவ கல்லூரிக்கும், மோகாவில் உள்ள ஒரு பொறியியல் கல்லூரிக்கும் அவரது பெயர் வைக்கப்பட்டது. 1965ஆம் ஆண்டு லாலா லஜபதி ராயின் நூறாவது பிறந்த நாள் அன்று அவர் உருவப்படம் கொண்ட அஞ்சல் தலை வெளியிடப்பட்டது. மேலும் அரியானா அரசாங்கம் அவரது பெயரில் ஒரு பல்கலைக்கழகத்தை நிறுவியது.

லாலா லஜபதி ராய் 1928 நவம்பர் 17ஆம் நாள் மாரடைப்பால் உயிர் நீத்தார். லாலா லஜபதி ராய் உண்மையான இந்திய விடுதலைப் போராட்ட வீரர் என்று இன்றளவிலும் பேசப்படுகிறார்.

– ஹெ.சமீமா பானு

இளங்கலைத்தமிழ், இரண்டாமாண்டு.

## சனவரி மாத முக்கிய தினங்கள்

| | |
|---|---|
| சனவரி 1 | – ஆங்கில வருடப்பிறப்பு |
| சனவரி 3 | – கட்டபொம்மன் பிறந்த நாள் |
| சனவரி 4 | – உலக பிரெய்லி தினம் |
| சனவரி 11 (1922) | – முதன்முதலாக இன்சுலின் மனிதனுக்குப் பயன்படுத்திய தினம் |
| சனவரி 12 (1863) | – சுவாமி விவேகானந்தர் பிறந்த நாள் தேசிய இளைஞர் தினம் |
| சனவரி 14 | – போகித் திருநாள் |
| சனவரி 15 | – தைப் பொங்கல் |
| சனவரி 16 | – திருவள்ளுவர் தினம் |
| சனவரி 17 | – டாக்டர் எம்.ஜி.ஆர் பிறந்த நாள் , உழவர் திருநாள் |
| சனவரி 23 (1897) | – நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் பிறந்த நாள் |
| சனவரி 24 | – பன்னாட்டு கல்வி தினம் |
| சனவரி 26 | – இந்திய குடியரசு தினம் |
| சனவரி 28 (1865) | – லாலா லஜபதி ராய் பிறந்த நாள் |
| சனவரி 29 | – பன்னாட்டுப் புதிர்கள் தினம் |

ஆ.ஹேமலதா

முதுகலைத் தமிழ் இரண்டாமாண்டு.

# புது முயற்சி

இதை.... அதை... என்று... எதையெதையோ
எழுதித் தள்ளிட ஆசைதான்
எழுதப்பட்டவை கவனிக்கப்படவில்லை
என்ற நிராசையும் கூட
ம்ம்ம்... ஆசைக்கும் நிராசைக்கும் இடையில் தரை
தட்டிய கப்பலாய் என் கவிதைமூச்சு!
முயன்று தோற்று மூலையில்
அடங்குபவர்கள் மனிதர்கள்
முயன்று தோற்றாலும் மீண்டும் மீண்டும்
முயல்பவர்கள் மாமனிதர்கள்
நான் மாமனிதன்!

என்றேனும் ஒருநாள்
என் வார்த்தைகள் வண்ணம்பெறும்;
என்கவிதைகள் களம்காணும்;
என்மொழி செம்மொழியாகும்;
என்வழி வரலாறாகும்;
என்கற்பனைக் கனவுகள் ஒருநாள்
அனைவரின் முன்னிலையில் அரங்கேறும்!
புவிஈர்ப்பு விசையைவிட என்
கவியீர்ப்புவிசை, அகிலம்தாண்டி
அண்டங்களையும் ஈர்க்கும்!
நம்பிக்கையோடு நான்......
இதோ! புதுமுயற்சியில்.....

- ஹ.யமுனா
கணிதவியல், முதலாமாண்டு

# அறிவே ஆற்றல்

ஒரு கிராமத்தில், ஒரு ஏழை விவசாயி ஒருவர் இருந்தார். தன் மனைவியை இழந்த அவர், தன் ஒரே மகளுடன் வாழ்ந்து வருகிறார். தன் மகள் படிப்பில் சிறந்து விளங்கியது அவருக்கே தெரியாமல் இருந்தது ஒரு நாள் அவரது மகளின் தேர்வு முடிவு வெளிவந்தது. அவள் மாநில அளவில் முதல் மதிப்பெண் பெற்றிருந்தாள். ஆனால், மேற்படிப்பு படிக்க வைக்கப் போதுமான வசதி இல்லை. ஆனால் தன் மகள் மேற்படிப்பு படிக்க வேண்டும் என்று விரும்பினார். அதனால் தன் ஊரில் இருக்கும் பண்ணையாரிடம் சென்று பணம் கேட்கிறார். அதற்கு அந்த பண்ணையார் ஒரு நிபந்தனை விதிக்கிறார். என்னவென்றால், ஆறு மாதத்தில் பணத்தைத் திருப்பித் தரவில்லை என்றால், அவரது மகளைத் தனக்குத் திருமணம் செய்து வைக்க வேண்டும் என்றார். அவரே விவசாயம் செய்து அந்தப் பணத்தைக் கொடுத்துவிடலாம் என்ற நம்பிக்கையுடன் அந்த நிபந்தனையை ஏற்றுக்கொண்டார். அந்தப் பணத்தில் தனது மகளை மேற்படிப்பு படிக்க வைத்தார். ஆனால் அந்த வருடத்தில் மழை அதிகமாகப் பொழிந்ததால் விவசாயத்தில் நட்டம் ஏற்பட்டது. பண்ணையார் கூறிய ஆறு மாதம் முடிந்தது. பணத்தைத் திருப்பித்தர முடியவில்லை. இருவரும் பண்ணையாரிடம் சென்றனர்.


அங்கு சென்ற பின்பு தான் அந்த மகளுக்குப் பண்ணையாரின் நிபந்தனை தெரியவந்தது. அவளின் கண்களில் நீர் வழிந்து, கண்கள் சிவந்தன. இதைப் பார்த்த பண்ணையார் அவளுக்கு ஒரு வாய்ப்பு கொடுத்தார். என்னவென்றால், நாளை ஊர்மக்கள் முன்னிலையில் இரண்டு பெட்டி வைப்பதாகவும், அதில் கருப்பு தண்ணீர் இருக்கும். அதில் இரண்டு பந்துகள் போடப்பட்டிருக்கும். ஒன்றில் பச்சை நிறப்பந்தும், மற்றொன்றில் சிகப்புநிறப் பந்தும் இருக்கும். அவள் பச்சை பந்தை எடுத்தால் திருமணம் செய்ய வேண்டியதில்லை. அதுவே சிகப்பு பந்தை எடுத்தால் திருமணம் செய்ய வேண்டும். அவளும் இதை ஏற்றுக் கொள்கிறாள். ஆனால் பண்ணையார் அந்த இரண்டு பெட்டியிலும்

சிகப்பு பந்தை வைக்கிறார். இதைப் பண்ணையாரிடம் வேலை செய்பவள் அந்தப் பெண்ணிடம் ஐந்து நிமிடத்திற்கு முன் கூறினாள். அவளுக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. அந்த இடத்திற்கு சென்றாள். அவள் ஒரு முடிவு செய்தாள். இரண்டு பெட்டியில் ஒரு பெட்டியைக் குளத்தில் தள்ளி விட்டாள். அனைவரும் குளத்தில் சென்று பார்க்கலாம் என்று வந்தனர். அவள் அனைவரையும் தடுத்தாள். இங்கு இருக்கும் பெட்டியில் எந்த பந்து இருக்கிறது என்று தெரிந்தால் குளத்தில் இருப்பது என்னவென்று தெரியும் என்று கூறினாள். அப்பெட்டியில் சிகப்பு பந்து இருந்தது. குளத்தில் விழுந்ததில் பச்சைப் பந்து இருந்தது என்று தெரிய வந்தது. அவள் பண்ணையாரைத் திருமணம் செய்ய வேண்டாம். தக்க சமயத்தில் தனது புத்தியைப் பயன்படுத்தியதால் அந்த இக்கட்டான நிலையிலிருந்து தப்பித்தாள்.

**ப.சுவாதி - சு.சுகன்யா**

கணிதவியல் முதலாமாண்டு.

## தூரிகைத் தூரல்கள்




ஜே.பிரவீன், வணிகவியல் 'இ' பிரிவு



# கண்ணதாசன்

தேன் சிந்தும் மலரைத்
தேடி வண்டு.....
அலைந்தது.... திரிந்தது.....
ரீங்காரமிட்டு ஆடியது.....

உன் கவி மலர் போல் இருக்க.....
தேன் உண்ட வண்டாய் நான்!
மயங்கினேன்!!

காதல் சுவையிலும் உன் கவி!
சோக சுவையிலும் உன் கவி!
தடுமாறு போதையிலும் உன் கவி!
தாலாட்டு முதல்
கையறுநிலை வரை உன் கவி!!

மங்கையின் மாண்பை வருணிக்கவோ
மாங்கனி என்னும் நூலைப் படைத்தாய்!!
வரகவி போல் திறன் படைத்த உன்னை
வரமாய் ஏற்றது சிறுகூடற்பட்டி!

சாகித்திய அகாதமி விருதிற்குத் தெரிந்தது
தகுந்த இடம் உன் கரங்கள் என்று!!
பாமர மக்களும்....
படிப்பறிவு இல்லா மக்களும்கூட
அடிமைகள்.....
உன் கவி திறனுக்கு!

இலக்கியத்தைவிட
உலகம் திரைப்பட பாடல்களை
விரும்புவதாலோ
அதிலும் உன் கவி துகள்கள்?

காதலிக்கும் போதும் உன் பாடல்!
காதலில் தோற்ற போதும் உன் பாடல் - பாடமாக!

உன் கவித்திறனை வியந்துதானோ
கவியரசி உன் எழுதுகோலில் அருளினாள்!!

உன் கவிதையாய் மாற
எல்லா தமிழ் எழுத்தும்
போட்டியிட்டு அடிபணிய.....
மனம் உருக்கும் உன் கவிதையாய்
தமிழ் எழுத்துக்கள்.....

போற்றுபவர் போற்றட்டும், புழுதி வாரித்
தூற்றுபவர் தூற்றட்டும், தொடர்ந்து செல்வேன்!
உன் இலட்சியக் குரலின்
எதிரொளியாய் உன் ரசிகை!!

**சா.யோகேஸ்வரி**
இளங்கலைத் தமிழ், இரண்டாமாண்டு.


# தூரிகைத் தூரல்கள்

தேவதை



ல.பிரசன்னா,
வணிகவியல்,
முதலாம் ஆண்டு.

# தூரிகைத் தூரல்கள்



பா.பவித்ரா
முதலாமாண்டு
கணிதவியல்



வி.பூஜா
கணிதவியல்,
முதலாம் ஆண்டு.

# தமிழ்துறை நிகழ்வுகள்

## திசம்பர் திங்கள் 2019


| | | |
|---|---|---|
| 09-12-2019 | - | பாரதி உலா |
| 09-12-2019 | - | சிறப்புச் சொற்பொழிவு |
| 16-12-2019 | - | விதை. |
| 18-12-2019 | - | சிறப்புச் சொற்பொழிவு |
| 21-12-2019 | - | இலக்கிய அரங்கம் - 5 |
| 09-12-2019 | - | சிறப்புச் சொற்பொழிவு |
| 23.12.2019 | - | டாக்டர் தைசாகு இகெதா பிறந்தநாள் முன்னிட்டு பள்ளிகளுக்கு இடையேயான போட்டிகள் |

## தூரிகைத் தூரல்கள்



மித்ரா.பி
நிர்வாகவியல்,
முதலாம் ஆண்டு

# தமிழ்க் கடவுள் முருகன்



மு.விஜயசாந்தி

இரண்டாம் ஆண்டு
உயிர் வேதியியல்